# திருக்குறள்

அகர முதல எழுத் தெல்லாம்
ஆதிபகவன் முதற்றே உலகு

விளக்கம்:-

உயிர்கள் அனைத்தும் இறைவனை முதன்மையாகக் கொண்டு அமைவது போல எழுத்துக்கள் அனைத்தும் அகரத்தை முதன்மையாகக் கொண்டுள்ளன.

கற்க கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக

**விளக்கம்:-**

நூல்களைத் தெளிவாகவும் முழுமையாகவும் கற்க வேண்டும். அவ்வாறு கற்ற நூல்களின் படி வாழ வேண்டும்.

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று.

விளக்கம்:-

ஒருவர் நமக்கு செய்த நன்றியை [உதவியை] மறக்கக்கூடாது. ஒருவர் செய்த தீமையை அன்றே மறந்துவிட வேண்டும்.

தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு.

விளக்கம்:-

நெருப்பினால் ஏற்பட்ட காயம் குணமாகிவிடும். ஆனால் தீய சொற்களால் ஏற்பட்ட மனக்காயம் ஆறாமல் தழும்பாக நிலைத்துவிடும்.

**முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை இன்மை புகுத்தி விடும்.**

விளக்கம்:-

எந்த ஒரு செயலையும் முயற்சியுடன் செய்ய வேண்டும். முயற்சி இல்லையேல் வெற்றி பெறுவது கடினம்.